**அகில உலக ஜெப நாள்**

**எழுத்து---சுரினாம் உலக ஜெபக் குழு**

***மார்ச்-2, 2018***

***“தேவனுடைய படைப்பு அனைத்தும் மிகவும் நல்லது”***

***வேத ஆராய்ச்சி --- ஆதியாகமம் 1:1-31***

### *முன்னுரை*

*சமீப காலமாக நம் அனைவராலும் அதிகம் பேசப்படும் விஷயம் கால சூழ்நிலை மாற்றம். உலகிலுள்ள மற்ற நாடுகளைப் போலவே உலக வெப்பமயமாகுதலினால் ஏற்படும் காலசூழ்நிலை மாற்றத்தின் பாதிப்புக்களை சுரினாமும் அனுபவித்து வருகிறது. சுரினாமின் முதன்மை பட்டணமான பராமரிபோ அட்லாண்டிக் கடற்கரை அருகில் அமைந்து இருப்பதால், மழைக் காலங்களில் இந்த இடங்களை சுற்றி மழை நீர் சூழ்ந்து வெள்ளம் ஏற்பட்டு விடும். நாம் உற்றுப் பார்ப்போமானால், இப்படிப்பட்ட இயற்கை பேரிடர்கள், பேரழிவுகள் ஏற்படக் காரணம் கால சூழ்நிலை மாற்றம் மட்டுமல்ல. மனிதர்களாலும் இப்படிப்பட்ட காரியங்கள் நிகழ்கின்றன. ஆறுகளை மாசுபடச் செய்தல், தங்க சுரங்கங்கள் தோண்டும் போது பாதரசம் போன்ற கழிவுகளை ஆறுகளில் கலப்பது போன்ற மனிதன் செய்கிற காரியங்களாலும் இயற்கை சீரழிவுகள் ஏற்படுகிறது. மனிதர்களாகிய நாம் தான் இதற்கு முக்கிய காரணம் என்று நாம் ஒத்துக்கொள்ள வேண்டும். அதே சமயம் மனிதர்களாகிய நாம் தான் மனுகுலத்துக்கும், தேவனுடைய படைப்புக்கும் இடையே செயல்பட்டு நல்லிணக்கத்திக் கொண்டு வரவேண்டும்.*

*பூமியின் எதிர்காலத்தை அடுத்த தலைமுறையினருக்கு (சந்ததிகளுக்கு) எடுத்து செல்ல வேண்டிய பொறுப்பு கிறிஸ்துவ பெண்களாகிய நம் ஒவ்வொருவருக்கும் உண்டு. இது தான் நம் கிறிஸ்துவ நம்பிக்கையின் முக்கிய மூலக்கூறு. தேவனுக்கும் அவருடைய படைப்புக்கும், தேவனுக்கும் மனுகுலத்துக்கும் இடையே ஒரு நல்ல உறவு வைக்க நாம் நினைவூட்டப்படுகிறோம். அதுதான் நாம் ஒவ்வொரு ஜீவனுக்கும் காட்டும் மரியாதை.*

*இந்த 21ஆம் நூற்றாண்டில் வாழ்ந்து கொண்டிருக்கும் கிறிஸ்துவ சமூதாயமாகிய நாம் அறிந்து கொள்ள வேண்டியது என்னவெனில், வளர்ந்து வரும் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்ப நாம் நம்மை மாற்றிக் கொள்வது எவ்வளவு முக்கியமோ அதே அளவு அதன் பாதிப்புகளிலிருந்து நம்மையும் தேவனுடைய படைப்புகளையும் பாதுகாப்பது மிகவும் அவசியம்.*

*நாம் அப்போஸ்தலர் விசுவாச பிரமாணத்தை கூறும்போது என்னத்தை உறுதிபடுத்துகிறோம்? “வானத்தையும், பூமியையும் படைத்த சர்வ வல்லமையுள்ள பிதாவாகிய தேவனை விசுவாசிக்கிறேன். அவருடைய குமாரனாகிய நம்முடைய நாதர் இயேசு கிறிஸ்த்துவையும் விசுவாசிக்கிறேன். பரிசுத்த ஆவியையும் விசுவாசிக்கிறேன்”. நம்முடைய தேவன் எப்படிப்பட்ட சிருஷ்டிகர் என்பதை நம்முடைய விசுவாசத்தின் மூலம் உறுதிபடுத்துகிறோம்.தேவன் படைத்த இந்த உலகத்தில் கிறிஸ்துவர்களாகிய நம்முடைய பங்கு என்ன? இந்த 21 ஆம் நூற்றாண்டில் வாழும் நம்முடைய பொறுப்புகள் என்ன?*

*எனவே, ஆதியாகமம் 1: 1-31-இன் அடிப்படையில் “தேவன் படைத்த அனைத்தும் மிகவும் நல்லது” என்ற கருப்பொருளால் வழிநடத்தப்பட இருக்கிறோம்.*

### *ஆதியாகமம் 1: 1-31-இன் பின்னனியும், விளக்கமும்*

*‘ஆதியாகமம்’ என்ற சொல்லின் பொருள் துவக்கம், ஆரம்பம், தோற்றம் என கூறலாம். விசுவாசமுள்ள மக்களால் தேவனிடத்திலிருந்து வெளிப்பாடுகள் பெற்று இந்த புத்தகம் எழுதப்பட்டது. ஒன்றுமில்லாத வெறுமையானதிலிருந்து தேவன் இந்த வானத்தையும் பூமியையும் அண்ட சராசரங்களையும் உண்டாக்கினார். நாம் வாழுவதற்கான இந்த பூமியையும் உண்டாக்கினார் என்று வேதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. தேவன் மனிதனை தன்னுடைய சாயலில் உருவாக்கி தன்னுடைய படைப்பின் முழுமையை நிறைவு செய்தார்(1-27). பின்பு*

*மனிதன், தேவன் உண்டாக்கின இந்த படைப்புகளையெல்லாம் பத்திரமாக பார்த்துக் கொள்ள வேண்டிய கட்டளையை அவரிடமிருந்து பெற்றான். இவை அனைத்தும் தேவனுடைய பார்வைக்கு மிகவும் நன்றாயிருந்தது(28-31)*

*தேவன் இந்த வானம் பூமி அனைத்தையும் தம்முடைய வார்த்தையினாலேயே உண்டாக்கினார். ஆதியாகமத்தில் தேவன் படைத்த ஒவ்வொரு படைப்பின் அழகு,அவற்றின் செயல்பாடுகள், இடம், பொருள் இவற்றைபற்றியெல்லாம் மிக அழகாக சொல்லப்பட்டிருக்கிறது. தேவன் தான் படைத்த எல்லாவற்றையும் பார்த்தார், எல்லாம் மிகவும் நன்றாக இருந்தது.*

*சங்கீதம் 8ஆம் அதிகாரத்தில் சங்கீதக்காரன் இப்படியாக சொல்லுகிறார். "தேவனே உமது விரல்களின் கிரியையாகிய உம்முடைய வனங்களையும், நீர் ஸ்தாபித்த சந்திரனையும் ……….(சங் 8:3-5) நீர் மனிதனை நினைப்பதற்கும், அவனை விசாரிப்பதற்கும் அவன் எம்மாத்திரம்…..… உமது கரத்தின் கிரியைகளின் மேல் நீர் அவனுக்கு அதிகாரம் கொடுத்து, அவைகளின் மேல் அவனுக்கு ஆளுகை தந்து சகலத்தையும் அவன் பாதங்களுக்கு கீழ்படுத்தினீர்.*

*சங்கீதக்காரன் சொல்லுவதைப் போல் தேவன் படைத்த எல்லாவற்றையும் அனுபவிக்கும் உரிமை மனிதனுக்கு உண்டு. ஆனால் அவைகளை அழிக்காமல் பாதுகாக்க வேண்டிய பொறுப்பும் மனிதர்களுக்கு உண்டு.தேவனுடைய படைப்புகளின் மேல் நிலைத்தன்மை கருத்தில் கொள்ளாமல் நாம் இந்த சமூகத்துக்கு முன்னேற்றம் கொண்டு வர முடியாது. தேவன் படைத்த இயற்கை வளங்களை பாதுகாக்காமல், புதுப்பிக்காமல்,அவைகளையெல்லாம் அழித்துவிட்டு வளர்ச்சியை மட்டும் எடுத்துக் கொள்ளக் கூடாது. தேவன் மனிதனை தம்முடைய சாயாலில் ஆணும் பெண்ணுமாக படைத்தார். அப்படிப்பட்ட நாம் இந்த பூமிக்கு சுபிட்சத்தையும், சமாதானத்தையும் கொண்டு வர பாடுபட வேண்டும்.*

*மிருகங்களைப் போலவே மனிதர்களாகிய நாமும் தேவனிடத்திலிருந்து ஆசீர்வாதத்தையும், கட்டளைகளையும் பெற்றிருக்கிறோம். தேவனுடைய படைப்பின் மீது பொறுப்புணர்வு, நல்ல உக்கிராணத்துவம்,பாதுகாத்து பராமரிக்கும் கட்டளையை பெற்ற நாம் அதன்படி செயல்பட வேண்டும். எப்போதும் நாம் நம்மை தேவனுக்கு மேலாக உயர்த்தி வைக்கக் கூடாது. ஏனெனில் "பூமியும் அதின் நிறைவும் தேவனுடையது"(சங் 24:1). ஆண்டவருடைய படைப்பின் திட்டத்தில் நாமும் ஒரு பங்காளிகளாக செயல்பட வேண்டும்.*

## குழு வேத ஆராய்ச்சி:

## *வேத பகுதி : ஆதியாகமம் :1: 1-31*

*அன்றிலிருந்து இன்று வரை தேவன் நம்மோடு என்ன பேசுகிறார் என்பதை அறிந்து கொள்வதற்காக நாம் தினமும் வேதத்தை வாசிக்க வேண்டும். இதுவே நம்முடைய அனைத்து செயல்களுக்கும் ஒரு சிறந்த வழிகாட்டியாக இருக்கும்.*

*இந்த வழிமுறை 4 பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது. பங்கேற்பாளர்களிடம் உற்சாகமாக உறவாடக்கூடிய ஒரு மதிப்பீட்டாளரை தெரிவு செய்யவும்.*

1. ***உற்றறிதல்:***

*நமக்கு கொடுக்கப்பட்டுள்ள இந்த பகுதியில் வேதம் என்ன சொல்லியிருக்கிறது. நமது உரையாடலை ஆரம்பிப்பதற்கு முன்பாக குறிப்பிட்ட வேத பகுதியை சில முறை படிக்கவும். என்ன வார்த்தைகள் உங்கள் கண்களுக்கு முன்பாக நிற்கின்றது. தேவனுடைய படைப்பு பற்றி, மனித இனத்தைப் பற்றி என்ன சொல்லப்பட்டு இருக்கிறது? எந்த காரியம் திரும்ப திரும்ப அழுத்தமாக சொல்லப்பட்டுள்ளது?*

2. ***விளக்கிக் கூறுவது: ( பெரிய குழுக்களாக இருந்தால் சிறு சிறு குழுக்களாக பிரிந்து கொள்ளலாம்)***

*அ. உங்களுக்கு முன்பாக வைக்கப்பட்டுள்ள அல்லது கேட்ட வார்த்தைகளிலிருந்து என்ன காரியங்கள் உங்கள் கண்களுக்கு முன்பாக நிற்கிறது? (பங்கேற்பாளர்கள் என்ன செய்தி*

*சொல்லப்பட்டுள்ளது என்பதை தங்கள் சொந்த அனுபவங்களிலிருந்து எடுத்து ஆராய்ச்சி செய்யலாம்).*

*எ.கா வசனம் 2-3 என்ன நிகழ்வு உங்கள் கண்களுக்கு முன்பாக அல்லது நினைவுக்கு வருகிறது?*

*வசனம் 6-7 என்ன நிகழ்வு உங்கள் நினைவுக்கு வருகிறது? அதை நீங்கள் எப்படி புரிந்து கொள்ளுகிறீர்கள்?*

*ஆ. ஆதி 1: 22, 28 வசனங்களின் படி தேவன் மனிதனையும் மிருகங்களையும் சிருஷ்டித்தார். அப்படி கொடுக்கப்பட்ட ஆசீர்வாதம் சுற்றுச் சூழல் மாசுபாடு, இயற்கை பேரிடர், மேம்பட்ட தொழில் நுட்ப வளர்ச்சி, மனிதர்கள் மற்றும் இயற்கை சீற்றங்களால் இப்போது எப்படி இருக்கிறது?*

*இ. மனிதர்களாகிய நாம் தேவன் நமக்கு கொடுத்த அவரது படைப்பின் வளங்களை எப்படி பாதுகாக்கிறோம். கடவுளின் ஆசீர்வாதங்களை பாதுகாக்க நாம் என்ன செய்ய வேண்டும்?*

*ஈ. வரும் நமது சந்ததிகளுக்கு நாம் இந்த பூமியை நல்ல நிலையில் தான் விட்டு செல்கிறோம் என்று எப்படி உறுதி செய்ய முடியும்?*

- *உணவு உற்பத்தி ( இயற்கை உணவு, இரசாயன உரங்கள், சிறிய அளவிலான பண்ணை, வேளாண்மை)*
- *கனிம வளங்களை பிரித்தெடுத்தல்: ( தங்கம், பாக்ஸைட், மற்றும் பல), காடுகளை அழித்தல், (முற்றிலுமாக அழிப்பதால் ஆக்ஸிஜன் குறைபாடு) அறுவடை, வேட்டையாடுதல், பாதுகாக்கப்பட வேண்டிய அறிய இனங்களை அழித்தல் எ.கா கடல் ஆமை போன்றவை*
- *கழிவு பொருட்களை சரியான முறையில் நிர்வாகிப்பது: ( உரக்குழி, மறு சுழற்சி முறை, மறு பயன்பாடு, மக்கும் பொருட்களைக் கொண்டு உரங்கள் தயாரிப்பது)*
- *குழந்தைகள், வாலிபர்கள் மற்றும் பெண்களுக்கு எதிரான வன்முறைகள்.*

***3. முழுமையான முடிவு:***

*இறுதியாக, நாம் படித்த இந்த கட்டுரையின் சாரம்சம் என்னவெனில் "தேவன் படைத்த அனைத்தும் மிகவும் நல்லது" என்றிந்த கருப்பொருள் நமக்குக் கூறும் கருத்து ஆண்டவர் படைத்த ஆசீர்வாதங்களைப் பாதுகாக்க வேண்டியது நம் ஒவ்வொருவருடைய கடமையாகும் என்பதே.*

***4. நடைமுறை:***

- *பங்கேற்பாளர்கள் வேதத்தின் மூலம் கற்றுக் கொண்ட காரியங்கள், உரையாடல்களை குழுவில் உள்ளவருடன் பகிர்ந்து கொள்ள வேண்டும்.*
- *பங்கேற்பாளர்கள் சுற்றுபுற சூழல் சம்மந்தப்பட்ட திட்டங்களை மற்றவர்களோடு இணைந்து செயல்படுத்த வேண்டும்.*
- *பங்கேற்பாளர்கள் இந்த கருப்பொருளுக்கு ஏற்ப கவிதை, கட்டுரைகள், ஜெபக்குறிப்புகள், படங்கள் வரைய ஊக்கப்படுத்தலாம்.*
- *பங்கேற்பாளர்கள் தேவனது படைப்பின் மீது தங்களுக்குள்ள தனிப்பட்ட அக்கறையை, பொறுப்புகளை எழுதலாம்.*